**பெருநகர சென்னை மாநகராட்சி**

**தேர்தல் செய்தி வெளியீடு**

**தே.செ.வெ.எண். 61** **நாள்: 02.06.2024**

**சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 3 நாடாளுமன்றத் தொகுதிகளுக்கான வாக்கு எண்ணும் மையங்களில் வாக்கு எண்ணும் பணிகளுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாட்டு பணிகள் குறித்து மாவட்ட தேர்தல் அலுவலர்/கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் இன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

தமிழ்நாட்டில் 2024 நாடாளுமன்ற பொதுத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு 19.04.2024 அன்று நடைபெற்று முடிவடைந்ததைத் தொடர்ந்து, 04.06.2024 அன்று நடைபெறவுள்ள வாக்கு எண்ணிக்கையினை முன்னிட்டு, சென்னை மாவட்டத்திற்குட்பட்ட தென்சென்னை நாடாளுமன்றத் தொகுதி-அண்ணா பல்கலைக்கழக வாக்கு எண்ணும் மையம், மத்தியசென்னை நாடாளுமன்றத் தொகுதி-லயோலா கல்லூரி வாக்கு எண்ணும் மையம் மற்றும் வடசென்னை நாடாளுமன்றத் தொகுதி- இராணி மேரி கல்லூரி வாக்கு எண்ணும் மையங்களில் வாக்கு எண்ணும் பணிகளுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாட்டு பணிகள் குறித்து மாவட்ட தேர்தல் அலுவலர்/கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் இன்று (02.06.2024) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த மையங்களில் தபால் வாக்குகள் எண்ணும் அறை, மின்னனு வாக்குப்பதிவு இயந்திரங்களின் வாக்கு எண்ணும் பகுதி, ஊடக மையம், குடிநீர் வசதி, கழிப்பறை வசதி, மின்வசதி, அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கான உணவு ஏற்பாடுகள் குறித்தும், பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் வாகன நிறுத்த இடங்கள் உள்ளிட்ட தொடர்புடைய அனைத்து முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்தும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, அலுவலர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்.

இந்த ஆய்வுகளின்போது, கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்கள் டாக்டர் வி.ஜெய சந்திர பானு ரெட்டி, இ.ஆ.ப., (கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்)), டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., (இணை ஆணையாளர் (பணிகள்)), தேர்தல் நடத்தும் அலுவலர்கள்/வட்டார துணை ஆணையாளர்கள் திரு.எம்.பி.அமித், இ.ஆ.ப., (தெற்கு), திரு.கே.ஜெ.பிரவீன் குமார், இ.ஆ.ப., (மத்தியம்), திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., (வடக்கு) மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**